168
2.74

168

# தி. மு. க.

# தோற்றதா?

★

தி. சி. சிவஸ்வாமி

★

V211, 4 N49
N54
59236

விலை 0—2—0.

# "ரயில்களை நிறுத்துங்கள்!"

●

15—7—53 காலை கும்பகோணத்திலிருந்து காரைக்குடிக்குப் போகப் புறப்பட்டேன். குடந்தை ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தேன்.

டிக்கட் வாங்கும் இடத்தில் அதிகக் கூட்டமில்லை; ஆனால், பிளாட்பாரத்தில் ஆயுதந்தரித்த போலீசார் அணிவகுத்து நின்றனர்.

சிறிதுநேரத்தில் மாயவரம் போகும் வண்டி குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு மணி தாமதமாக வந்தது. மூன்றாம் வகுப்புப் பெட்டிகளின் வெளிப்புறங்களில் "**ரயிலை நிறுத்துங்கள்**" என்ற கோஷங்கள் சாக்கட்டியால் எழுதப்பட்டிருந்தன. ஒரு பெட்டி நிறைய ஆயுதந்தரித்த போலீஸ் நிரம்பியிருந்தனர்.

ஒரு பெட்டியிலிருந்து சில திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் இறக்கப்பட்டு, ஸ்டேஷனுக்கு வெளியே தயாராயிருந்த போலீஸ் லாரிகளில் நேரே கோர்ட்டுகளுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

மாயவரம் போகவேண்டிய ரயிலும் ஈனசுவரத்தில் ஊதிக்கொண்டே புறப்பட்டது. ஆனால், நான் போக வேண்டிய ரயில் மணிக்கணக்காகவரவில்லை. குறிப்பிட்ட

நேரத்துக்கு காரைக்குடி போய்சேருவோமென்ற உறுதியில்லாததால், நானும், சரி வேலை கெட்டதென்று வீடு திரும்பிவிட்டேன்.

மறுநாள் காலையில், குடந்தைக்கு காலை 3-மணிக்கு வரவேண்டிய இந்தோ–சிலோன் எக்ஸ்பிரஸ் ஆறு மணிக்கு வந்தது. அதில் காரைக்குடிக்கு புறப்பட்டேன்.

வண்டி திருச்சி ஜங்ஷனை நெருங்கும்போது நான் உட்கார்ந்த பெட்டியில் சில கற்கள் வந்து விழுந்தன. ஒரு கல் எலெக்ட்ரிக் விளக்கில் பட்டு, கண்ணாடி உடைந்து எங்கும் சிதறியது. என்மீதும் கண்ணாடிச் சிற்கள் விழுந்தன. நல்லவேளை, காயம் படவில்லை. ஆனால் பாவம், மலேயாவிலிருந்து சொந்த ஊரான ராமனுதபுரத்திற்குத் திரும்புக்கொண்டிருந்த ஒரு முஸ்லிம் வியாபாரியின் நெற்றியில் ஒரு கண்ணாடித்துண்டுதைத்து ரத்தம் கசிந்தது.

ரயில் ஜங்ஷன் போனதும் அவருக்கு முதல் சிகிச்சை செய்யப்பட்டது. கல்லெறிந்த புண்யவான்கள் போன இடம் தெரியவில்லை!

* * *

தமிழ் நாட்டிலே தி. மு. க. இயக்கம் ஆரம்பித்துள்ளனர். ராஜாஜி சர்க்காரின் கல்வித்திட்டம் ஓர் காரணம். அதைவிட, திராவிட இயக்கத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதும் 'தன்மானத்தோழர்களை' தட்டி எழுப்பியுள்ளது.

இந்த இயக்கம் முக்கியமாக ரயிலை நிறுத்துவதிலும், டால்மியாபுரத்தில் நோட்டீஸ் ஒட்டுவதிலும், சென்னை வீதிகளில் கோஷம் போடுவதிலும் முனைந்துள்ளது.

நாட்டிலே நிலவும் ஏழ்மைத்தனத்தை ஒழிக்கும் ஓர் சமூகப்புரட்சியின் அஸ்திவாரத்தில் இது நடைபெற வில்லை. தொழிலாளி வர்க்கத்தின் உயர்வுக்காக, பாட்டாளி மக்களின் முன்னேற்றத்துக்காக தமிழகத்தில் பொருளாதார சமத்வத்தை ஏற்படுத்துவதற்காக இது நடைபெறவில்லை. 'டால்மியாபுரத்தை' கள்ளக்குடியாக மாற்று! இது ஓர் லட்சியமாம்!! இதற்காக ஓர் இயக்கமாம்!

சுரண்டுதலில் வடநாட்டான் கூடாது, ஆனால், ஓர் ரத்தினசபாபதி முதலியாரோ, ஓர் கெங்கா நாயுடுவோ அல்லது ஓர் முத்தையா செட்டியாரோ சுரண்டலாம்?

வெள்ளையனை வெளியேற்றிவிட்டு கருப்பன் சுரண்டலாம் என்று சில தேசியவாதிகள் நினைப்பது எப்படி தவறோ, அதைவிட டால்மியாவை வெளியேற்றி ஓர் தமிழ் முதலாளி மட்டும் சுரண்டலாமென்ற எண்ணம்!

இதற்கு ஓர் இயக்கமென்றபெயரில் பாசஞ்சர் ரயில்களை நிறுத்தி, நடுத்தர, கீழ்த்தர மக்களின் அன்றாட வாழ்விலே மண்ணைப்போட்டு, போலீஸ் அடக்குமுறையைத் தூண்டியிருக்கும் பிரஜா உரிமைகளையும் இழந்து, தமிழர்கள் வாழ்வது அறிவுடமையாகுமா? என்பதே என் கேள்வி.

ராஜாஜி ஆட்சியைக் குறைகூறுங்கள்; வேண்டா மென்று கூறவில்லை. காங்கிரஸ் பாசிஸத்தைப் பற்றி பேசுங்கள், தடுக்கவில்லை. 'முதலாளித்வம் ஒழிக'! என்று கூரைமீது நின்று கூவுங்கள்.

ஆனால், அதற்காக ஓர் இயக்கமென்ற பெயரில், ரயிலை நிறுத்துவதும், கோஷம் போட்டு சிறைச்சாலை களை நிரப்புவதும் வழிதானா என்பதை, தி. மு. க. தோழர்களை ஆராயும்படி வேண்டுகிறேன்.

சென்ற பொதுத் தேர்தலில், தி. மு. க. தலைவர் அண்ணாதுரையின் சமய சந்தர்ப்பவாத தந்திரங்களை நாம் மறப்பதற்கில்லை. காங்கிரஸை எதிர்த்து அவர் ஐக்கிய முன்னணியில் சேர்ந்தாரா? அல்லது, நாட்டிலே ஓர் நல்லாட்சியை நிறுவ பாடுபட்டாரா? சரித்திர ரீதி யான நெருக்கடி காலத்தில் தி. மு. க. தலைவர் அண்ணா, அக்காலத்தில் தனிக்காட்டுப் பாதையில் சென்ற ஓர் ஜின்னாவைப்போல் நடக்கவில்லையா? இதனால் யார் லாபமடைந்தது என்பதை தி. மு. க. தோழர்கள் சிந்திக்கவேண்டும்.

ஜாதி ஒழியவேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. மதப்பித்து மாயவேண்டுமென்பதும் மறுக்க முடியாத உண்மை.

ஆனால், அதற்கான வழி என்ன என்பதே பிரச்னை.

* * *

வடநாட்டான் சுரண்டுகிறான் என்று கூறுகிறார்கள். ஆனால், எத்தனை தமிழர்கள், தங்கள் இனத்தாரை

சுரண்டவில்லையா ? பணக்காரத் தமிழன் ஏழைத் தமிழனுக்கு அள்ளிக்கொடுத்துவிட்டானா? அல்லது கொடுத்து விடப் போகிறானா ?

ஜாதி வேற்றுமை ஒழிய வேண்டியதைவிட, இன்று வர்க்க வேற்றுமை ஒழியவேண்டுவது பலமடங்குகள் முக்கியமானது.

ஜாதியை பிரச்சாரத்தால் ஒழித்துவிட முடியாது. சமூக அநீதிகளை தன்மான இயக்கத்தால் களைந்துவிட முடியாது.

**ராஜ்யாதிகாரம் கையில் இல்லாமல், இன்னும் பத்து ஆண்டுகள் வாய்ப்பந்தல் போட்டாலும், சினிமாப் படங்கள் எடுத்தாலும், சீர்திருத்த நாடகங்கள் நடித்தாலும் பயனில்லை.**

ரஷ்யாவில் லெனின் செய்ததுபோல், துருக்கியில் கமால் அடாடர்க் செய்ததுபோல், இன்று எகிப்தில் தளபதி நகீப் செய்வதுபோல் சட்டங்கள் மூலமே எந்த அநீதியையும் ஒழிக்க முடியும். சட்டங்கள் இயற்ற சர்க்கார் உங்களிடமிருக்கவேண்டும். சர்க்கார் உங்கள் கையில் வர பாமரமக்கள் ஆதரவு வேண்டும். அதற்கான வழி என்னே என்பதை தி. மு. க. தோழர்களும் அனுதாபிகளும் சிந்திக்கவேண்டும்.

இந்திய அரசியலமைப்பு சட்டப்படி இந்த நாட்டின் சர்க்காரை மக்கள் மாற்ற உரிமை பெற்றுள்ளனர்.

மக்கள் விருப்பத்தை அறியவே சென்ற பொதுத் தேர்தல் நடந்தது, அன்று தி. மு. க. மக்கள் முன்னணியில் சேரவில்லை. அதன் பலனை இன்று நாடு அனுவிக்கிறது.

எந்த இயக்கமும் நியாயமான காரணங்களுக்காக, மக்களின் அடிப்படை கோரிக்கைகளுக்காக நடைபெற வேண்டுமே தவிர, பத்திரிகை விளம்பரத்திற்காகவும், சிலரை வீரர்களாக்குவதற்காகவும் அல்ல.

ராஜாஜியின் கல்வித் திட்டம் பிடிக்கவில்லையானால், ரயிலை நிறுத்துவதன்மூலம் என்னபலன் கிட்டுமென்பது பகுத்தறிவு வாதிகள் என்று கூறிக்கொள்ளும் தி. மு. க. தோழர்களைத்தான் கேட்கவேண்டும்.

உலக சரித்திரத்தில் பலஇயக்கங்கள் நடந்துள்ளன. ஆனால், அவை விரிந்த அடிப்படையில், ஒழுங்கான திட்டத்துடன், நடைபெற்றே வெற்றியடைந்துள்ளன.

இயக்கங்கள் இருவகைப்படும். 1. பலாத்காரப் புரட்சி. 2. சாத்வீக சட்டமறுப்பு.

தி. மு. க. இயக்கம் மேற்சொன்ன இரண்டிலும் சம்பந்தப்படாத ஓர் விசித்திர இயக்கமாகும்.

ஏனெனில், முதலாவது முறையைக் கையாளத் தக்க திறனோ, தியாக புத்தியோ, கொள்கையோ தி. மு. க. வுக்கு இல்லை.

இரண்டாவது வழியைப் பின்பற்றத் தக்க பொறுமையோ, கண்ணியமோ இவர்களிடம் இல்லை.

**இரண்டுமில்லாமல்** கல்லெறி, கலாட்டா, வசை புராணம், அபாய அறிவிப்பு சங்கிலியை இழுப்பது இவைகளை உலகில் எந்த அரசியல் கட்சியாவது சரித்

திரத்தின் எந்த சந்தர்த்பத்திலாவது கையாண்டு வெற்றி பெற்றதாக நான் படித்ததில்லை, கேட்டதில்லை!

* * *

## தி. மு. க. வின் திட்டமென்ன?

டால்மியாபுரத்திலும், தூத்துக்குடியிலும் நடந்த சம்பவங்கள்பற்றி பொதுவிசாரணை ஒன்று வேண்டு மென்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், நாட்டின் அமைதியைக் குலைக்கத்தான் இந்த இயக்கமா அல்லது மக்களின் நல்வாழ்வுக்கான போராட்டமா என்பதை மக்களின் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

ஒவ்வொரு அரசியல் கட்சியின் இயக்கமும் ஓர் பரந்த லட்சியத்திற்காக ஏதாவது ஓர் முறையில் நடை பெறுவது நமக்குத் தெரியும்.

உதாரணமாக, காங்கிரஸ் ஸ்தாபனம் பிரிட்டிஷாரை எதிர்த்து பல சாத்வீக இயக்கங்களை காந்திஜீ தலைமையில் நடத்தி இறுதி வெற்றியும் பெற்றது.

ரஷ்யாவிலும், சீனவிலும் கம்யூனிஸ்டு கட்சி பலாத் காரப் புரட்சிமூலம் அதிகாரத்தைக் கைப்பற்றியது.

இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டு கட்சியும், சாத்வீகத் தில் நம்பிக்கை வைத்திருப்பதாகக் கூறியது கிடையாது. தேர்தலுக்கு முன்பு ரணதிவே தலைமையில் பெரும்பா லும் பலாத்காரப் பாதையையே இந்திய கம்யூனிஸ்டுகள் பின்பற்றினர்கள். 'தெலிங்கான வழி' என்று அதை அவர்கள் பெருமையாகக் கூறிக்கொண்டார்கள். பின்னர்

அதே தெலுங்கானுவில் காங்கிரஸை தேர்தலிலும் முறியடித்தார்கள்.

ஒவ்வோர் கட்சிக்கும் அதன் திட்டமுண்டு.

காங்கிரஸ் லட்சியம் ராமராஜ்யம்.

கம்யூனிஸ்டு லட்சியம் பொதுமக்களின் ஜனநாயக ஆட்சி. (People's Democracy)

தி. மு. க. ஓர் அரசியல் கட்சியைப்போல் நடந்து கொள்கிறது. அதன் லட்சியம் திராவிட நாட்டை அடைவது என்கிருர்கள்.

இப்போது எங்கும் மொழிவாரி மாகாணங்கள் ஏற்பட்டு வருகின்றன.

ஒரு தியாகி பொட்டி ஸ்ரீராமுலுவின் சவப்பெட்டி மீது ஆந்திரநாடு உருவாகிவிட்டது. இதற்கு ஆந்திரத்தில் உள்ள சகல கட்சிகளின் ஒற்றுமையே காரணம்.

இன்று கர்னூலா, விஜயவாடாவா என்று ஆந்திரர்கள் சண்டைபோட்டாலும் அன்று ஆந்திர மகாசபையில் கம்யூனிஸ்டுகளும், காங்கிரஸ்காரர்களும் ஒன்றுதான்!

ஆனுல், மாகாண நிர்வாகத்தில் எதையாவது ஒன்றை குறைசொல்லி நாட்டை ஆந்திரர்கள் குழப்பவில்லை.

தி. மு. க. வுக்குப் பெரியாரை பிடிக்காது. கம்யூனிஸ்டுகளை கண்டால் நடுக்கம்.

எந்தக் கட்சியுடனும் சேர்ந்து வேலை செய்யும் எண்ணமுமில்லை.

**தொழிலாளர் முனையில் தி. மு. க. பிளவுபடுத்தும் செயலில் இறங்கிற்று. அரசியல் அரங்கில் தன் தலைமைக்காக தமிழ்நாட்டில் மற்ற கட்சிகளுடன் சேரவில்லை. அரசியலில் பச்சோந்தித்தனம்! தொழிலாளர் முனையில் துரோகம்! இதுவே தி. மு. க. வின் சென்றகால சரித்திரம்.**

இன்று தமிழகம் தாழ்ந்துவிட்டது.

தமிழனுக்கு ஒருவேளை சோற்றுக்கு வழியில்லை. கட்டிக்கொள்ள ஆடையில்லை. படித்த தமிழனுக்கோ, பாமரத் தமிழனுக்கோ வேலைகூட கிடைப்பதில்லை.

**தமிழ்ப் பெண்கள் தங்கள் மானத்தை விற்று வயிறு வளர்க்கிற நிர்க்கதியைத்தான், நான், கற்புக்கரசி கண்ணகி வாழ்ந்த தமிழகத்தில் பார்க்கிறேன்.**

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. யும், அமரகவி பாரதியும், தியாகி குமரனும் வாழ்ந்த தமிழகத்தின் துர்ப்பாக்கியத்தை துடைக்க தி. மு. க. விடம் என்ன புரட்சி திட்டமிருக்கிறது?

* * *

நான் கூறுகிறேன் ; ராஜாஜியின் கல்வித் திட்டத்தை மட்டும் மாற்றுவதிலோ, டால்மியாபுரம் பெயர் மட்டும் மாறுவதிலோ தமிழனின் நிலை மாறிவிடாது.

ரயில்வே ஸ்டேஷன்களில் உள்ள போர்டுகளில் இருந்த ஹிந்திப் பெயர்களை அழிப்பதும், பிள்ளையார்களை உடைப்பதும், இன்று ரயில்களை நிறுத்துவதும் 20-ம் நூற்றுண்டில் நடைபெறவேண்டிய அரசியல் இயக்கத்தின் அம்சங்களா என்பதை வாசகர்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

எந்த சமூக, அரசியல் பொருளாதார திட்டத்திற்காக இந்த இயக்கமென்று நான் கேட்கிறேன்.

தமிழ்நாட்டுக்கு தனி சர்க்கார் வரட்டும், அதை ஆள மக்கள் அண்ணுவையோ, பெரியாரையோ தேர்ந்தெடுத்தால் அதை நான் வரவேற்கிறேன். அதற்கான திட்டங்களை தி. மு. க. மற்ற கட்சிகளுடன் சேர்ந்து ஆராயட்டும் அதையும் வரவேற்கிறேன்.

ஆனல், ஏற்கனவே அல்லல் படும் மக்களுக்கு மேலும் வேதனையைக் கொடுக்கும் வெத்துவேட்டு இயக்கத்தின் பெயரால் நாட்டிலே போலீஸ் ஆட்சிக்கு அஸ்திவாரமிடுவது விவேகமான செயலா என்பதே என் கேள்வி.

ஓர் திட்டம் சரியாயில்லையென்றுல், அதை சட்ட சபையில் எடுத்துக்கூற எதிர்கட்சி ஒன்றிருக்கிறது. அதைவிட சக்திவாய்ந்த பத்திரிகைகள் உள்ளன.

பொதுஜன அபிப்பிராயத்தை அதிக நாட்கள் எந்த சர்க்காரும் உதாசீனம் செய்யமுடியாது.

ஜனநாயக முறைகளில் நம்பிக்கை உள்ளவர்கள் செய்யக்கூடிய காரியம் இதுதான். சட்டசபை முன்பு எதற்கெடுத்தாலும் குழப்பம் விளைவிக்க முயலுவதன் மூலம் எதை சாதிக்கமுடிந்தது என்று கேட்கிறேன்.

## முடிவு ...... ?

தி. மு. க. கலாட்டாவை ஓர் அரசியல் இயக்கம் என்று கொள்ளமுடியாது.

சரியான அரசியல் திட்டத்துக்காக, சரியான பாதையில் நடைபெருத எந்த இயக்கமும் வெற்றிபெற்றதில்லை. நாட்டிலே அதிருப்தியையும், குழப்பத்தையும் விளைவிக்கமுடியுமே தவிர, லட்சியம் கைகூடப்போவதில்லை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அறுபது ஆண்டுகள் போராட்டம் நடத்தியே காந்திஜீ வெற்றி பெற்ருர். அவரை நாடு ஆதரித்தது.

ரஷ்யாவில் லெனின் புரட்சி நடத்தி வெற்றி கண்டாரென்ருல் மக்கள் ஆதரவே காரணம்.

இவர்கள் லட்சியங்கள் உன்னதமானவை. சரித்திரப் பிரசித்தி வாய்ந்தவை, உலகம் போற்றக் கூடியவை.

**ஆனல், தமிழரின் பெயரால், தமிழ் நாட்டின் பெயரால், தமிழ் மொழியின் பெயரால் தி. மு. க. வைப்போன்ற அரசியல் கட்சிகள் செய்யும் தகராறுகளுக்கு இயக்கமென்று பெயர் கொடுக்க முடியுமாவென்பதே என் கேள்வி.**

தி. மு. க. வுக்கு நான் கூறுவது இதுதான்.

நீங்கள் ஓர் சமூக சீர்திருத்த கட்சியானல் புத்தகங்கள், பிரசார மேடைகள், சினிமாப் படங்கள் பிடிப்பதுடன் நின்றுகொள்ளுங்கள்.

நீங்கள் ஓர் அரசியல் கட்சியானல் 1953-ல் உலக சரித்திரத்தின் போக்கை அனுசரித்து, முற்போக்கு சக்திகளின் முகாமிலே நின்று ஒழுங்கான முறையில் சரியான திட்டமுடன் போராட வாருங்கள்.

அதை விட்டு வேறு பாதைகளில் சென்று இத்தனை காலம் சேமித்துவைத்த உங்கள் சக்தியை இப்போது நீங்கள் இறங்கியிருக்கும் வழிகளில் விரயப்படுத்தாதீர்கள் என்று கூற விரும்புகிறேன்.

'திராவிட நாடு' என்பது ஓர் அழகான கோஷம். ஆனல் அது ஓர் கானல் நீர்.

ஐக்கிய கேரள இயக்கமும், கர்நாடக மாகாணப் போரும் விசால ஆந்திர லட்சியமும் உருவாகி வரும் இத்தருணத்தில் தி. மு. க. வோ அல்லது தமிழரசுக் கழகமோ அல்லது திராவிடக் கழகமோ கம்யூனிஸ்டு கட்

சியோ எதுவாயினும் இன்று தமிழ் மாகாணத்தை ஏற்படுத்தக்கூடிய வழிகளை ஒன்றுகூடி ஆராயவேண்டும்.

ஆனல் திருத்தணிக் கிளர்ச்சியென்றே, டால்மியாபுரக் கிளர்ச்சியென்றே, கூறிக்கொண்டு சிறைகளுக்குப் போய் வந்துவிட்டு அங்கே கேழ்வரகு ரொட்டி கொடுக்கிருர்கள் என்று பேசுவது பேதமை தவிர வேறில்லை!

ஓர் பொதுவான அடிப்படையில் நாட்டிலுள்ள சகல முற்போக்கு கட்சிகளும் ஒன்றுகூடி சுதந்திரத் தமிழகத்திற்கான வழிகளை வகுக்கவேண்டும்.

மற்றபடி நாடு இன்றிருக்கும் நிலையிலே, தி. மு. க. வின் இயக்கம் ராஜாஜி செல்வாக்கை மங்கவைக்கலாம்.

அவருக்குப் பதில் வேறு ஓர் காங்கிரஸ் தலைவரிடந்தான் நிர்வாகம் ஒப்படைக்கப்படுமே தவிர வேறு ஆட்சி ஏற்பட வழியிருக்கிறதா என்று சிந்திக்க வேண்டும்.

**முடிவாகக் கூறின் இந்தியா என்ற இந்த உப கண்டத்தில் மக்கள் ஜனநாயகம் மலருமோ ,அன்றுதான் சுதந்திரத் தமிழகம் உதயமாகும். இந்த லட்சியத்திற்காக சகல முற்போக்கு கட்சிகளும் ஒன்று சேர்ந்து பாடுபடுவதே அறிவுடமையாகும்.**

★

# ஏஜண்டுகள் தேவை!

**தமிழ் நாட்டின் முதல் வர்த்தக மாதப் பத்திரிகை.**

## "வியாபாரி"

○

வர்த்தகச் செய்திகள்
பிரபலஸ்தர்கள் கட்டுரைகள்
மார்க்கெட் நிலவரங்கள்
விலைவாசிகள்பற்றின விபரங்கள்

○

| | | | |
|---|---|---|---|
| தனிப்பிரதி | 0 | 4 | 0 |
| வருட சந்தா | 3 | 0 | 0 |

○

**விளம்பர விகிதங்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ரூ. | 40 | 0 | 0 |
| அரைப்பக்கம் | ... | ரூ. | 20 | 0 | 0 |
| கால்பக்கம் | ... | ரூ. | 10 | 0 | 0 |

**விபரங்கட்கு :—**

**'வியாபாரி' ஆபீஸ்,**
**கும்பகோணம்.**

ஸ்ரீ முருகன் அச்சகம், கும்பகோணம்.

# என் அறைகூவல் !



ஆளும் கட்சித் தலைவர்கள் மீது வசைமாரி பொழிவதாலும், ஓர் மைனாரிட்டி வகுப்பாரை சுட்டிக்காட்டி பயமுறுத்துவதாலும், வெற்றி பெற முடியாது. அதிகாரம் கையில் இல்லாமல் ஜாதி, மத, வர்க்க வேறுபாடுகளைக் களைய முடியாது.

நாட்டின் சர்வ கட்சிகளும் ஒன்றுசேர்ந்து பாடுபட்டாலன்றி, சுதந்திர தமிழகத்தை, திராவிட மக்களின் ஜனநாயக சர்க்காரை (Dravidian People's Democracy) ஏற்படுத்தமுடியாது.

இன்றைய நிலையில் கம்யூனிஸ்டு, திராவிட, திராவிட முன்னேற்றக் கட்சிகளும், சென்னை சட்டசபை சுயேச்சை அங்கத்தினர்களும், உழைப்பாளிக் கட்சித் தலைவர்களும் ஒன்றுசேரட்டும்.

அதற்கான துணிவு ஏற்படுமா என்பதே என் அறைகூவல் !

தி. சி. சிவஸ்வாமி.